सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

# வரவு - செலவுத் திட்ட உரை

## 2024 - 2025

திரு **ந. ரங்கசாமி**

மாண்புமிகு முதலமைச்சர்



ஆகஸ்ட் 02, 2024

# வரவு – செலவுத் திட்ட உரை

# 2024 – 25

வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி. (குறள்-542)

உயிர்கள் எல்லாம் மழையை எதிர்பார்த்தே வாழும், குடிமக்களோ ஆளுவோரின் நேர்மையான ஆட்சியை எதிர்பார்த்தே வாழ்வர்.

*மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களே !*

பெருமை வாய்ந்த இந்த அவையில், நான் 2024-25ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க உள்ளேன். பதினைந்தாவது சட்டமன்றத்தில் எனது நான்காவது வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். 2024-25ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை, மானியக் கோரிக்கைகள் மற்றும் விளக்க விவரக் குறிப்பு ஆகியவை வழங்கப்பட உள்ளன.

**2.** மாண்புமிகு நரேந்திர மோடி ஜி அவர்களை பாரதப் பிரதமராக மூன்றாவது முறையாக தேர்ந்தெடுத்த நமது நாட்டு மக்களின் நம்பிக்கையை நான் பாராட்டுகிறேன். நம் நாடு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் உன்னத மற்றும் தொலைநோக்கு பார்வை கொண்ட தலைமையின்கீழ், எதிர்வரும் ஆண்டுகளில் “விக்சித் பாரத்-2047” திட்டம் முழுமையாக நிறைவடையும் என உறுதியாக நம்புகிறேன்.

**3.** தேர்தல் துறையின் மேற்பார்வையில் அண்மையில் நடந்த நாடாளுமன்றத் தேர்தல் புதுச்சேரியில் அமைதியாகவும், சுமூகமாகவும் நடைபெற்றது. இதற்காக ஓய்வின்றி பணியாற்றிய அனைத்துத் துறை அரசு ஊழியர்கள் குறிப்பாக வருவாய், பொதுசுகாதாரம், பொதுப்பணித்துறை, மின்துறை, தூய்மைப்பணியாளர்கள், காவல் துறையினர் மற்றும் நல்ல ஒத்துழைப்பை நல்கிய பொதுமக்கள் ஆகிய அனைவருக்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**4.** எனது அரசு இவ்வாட்சிப்பரப்பின் அனைத்து தரப்பு மக்களின், குறிப்பாக சமுதாயத்தில் நலிவடைந்த ஏழை எளிய மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்தை முதன்மையாக கொண்டு பல்வேறு நலத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இதன் பயனாக இவ்வாட்சிப்பரப்பின் மொத்த உற்பத்தி குறியீடு (GSDP) மற்றும் தனிநபர் வருமானம் (Per Capita Income) நிலையாகவும், சீராகவும் உயர்ந்து வருகின்றது என்பதை இந்த மாண்புமிகு பேரவையில் தெரிவித்துக் கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**5.** இந்த நிதியாண்டில், 01-04-2024 முதல் 31-08-2024 வரையிலான ஐந்து மாதங்களுக்கு உண்டான அரசின் அன்றாட அத்தியாவசிய செலவினங்களுக்காக முன்னளி மானியமாக ₹ 5,187 கோடிக்கு இப்பேரவையின் ஒப்புதல் பெறப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

**6.** 2024-25ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்டத்தை இறுதி செய்வதற்காக நடைபெற்ற மாநில திட்டக் குழு கூட்டத்தில் இவ்வாட்சிப்பரப்பில் சாலை அமைத்தல், மின் நிலையம், சுற்றுலா வளர்ச்சி, மென்பொருள் மேம்பாடு, சுகாதாரம் மற்றும் கல்வி ஆகியவற்றிற்கான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் பொருட்டு மூலதன செலவினங்களுக்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்வதன் முக்கியத்துவம் குறித்து விவாதிக்கப்பட்டது. இதனை கருத்தில் கொண்டு 2024-25ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**7.** 2024-25ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ₹ 12,700 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில், இவ்வாட்சிப்பரப்பின் சொந்த வருவாய் ₹ 6,914.66 கோடியாகும், மாநில பேரிடர் நிவாரண நிதியையும் சேர்த்து மத்திய அரசின் நிதி உதவி (Normal Central Assistance including UTDRF) ₹ 3,268.98 கோடியாகும். மத்திய சாலை நிதி (Central Road Fund) ₹ 20 கோடி மற்றும் மத்திய அரசுத் திட்டங்களின்கீழ் (Centrally Sponsored Schemes) வழங்கும் நிதி ₹ 430 கோடியாக இருக்கும். மேலும், நிதிப் பற்றாக்குறையை ஈடுகட்ட ₹ 2,066.36 கோடியை கடன் (Borrowing including Negotiated Loan) மூலம் திரட்ட மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடான ₹ 12,700 கோடியில், ₹ 10,969.80 கோடி வருவாய்ச் செலவினங்களுக்காகவும் மற்றும் ₹ 1,730.20 கோடி மூலதன செலவினங்களுக்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8.** எனது அரசு கடந்த நிதி ஆண்டில் சிறப்பு நிதியங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்ததைப் போலவே, 2024-25ஆம் நிதியாண்டிற்கும் அனைத்து துறைகளுக்குமான சிறப்பு நிதியமாக ₹ 2,442.18 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதில்

(i) மகளிருக்கான சிறப்பு நிதியத்திற்காக (Gender Budgeting) ₹ 1,403.46 கோடியும்

(ii) இளையோர் சிறப்பு நிதியத்திற்காக (Youth Budgeting) ₹ 516.81 கோடியும் மற்றும்

(iii) பசுமை சிறப்பு நிதியத்திற்காக (Green Budgeting) ₹ 521.83 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**9.** அரசின் நிதி ஆதாரங்களின் பெரும்பகுதி சம்பளம், ஓய்வூதியம், கடன் மற்றும் வட்டி செலுத்துதல் உள்ளிட்ட முக்கிய செலவினங்களுக்காகச் செலவிடப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். 2024-25ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடான ₹ 12,700 கோடியில், ₹ 2,574 கோடி சம்பளங்களுக்கும் (20.27 விழுக்காடு), ₹ 1,388 கோடி ஓய்வூதியங்களுக்கும் (10.93 விழுக்காடு), ₹ 1,817 கோடி கடன் மற்றும் வட்டி செலுத்துவதற்காகவும் (14.31 விழுக்காடு), ₹ 2,509 கோடி மின்சாரம் வாங்குவதற்காகவும் (19.76 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், அரசின் மற்ற முக்கிய நலத்திட்டங்களான முதியோர் ஓய்வூதியம், குடும்ப தலைவிக்கு நிதியுதவி, LPG சிலிண்டருக்கான மானியம் உள்ளிட்ட பிற நலத் திட்டங்களுக்கு ₹ 1,900 கோடியும் (15 விழுக்காடு), அரசுக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தன்னாட்சி உயர் கல்வி நிறுவனங்களுக்கு ₹ 420 கோடியும் (3.31 விழுக்காடு) மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்களுக்கு மானியக் கொடையாக ₹ 1,082 கோடியும் (8.52 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10.** இந்த முன்னுரையுடன், 2024-25ஆம் நிதி ஆண்டிற்கான துறைவாரியான மானியக் கோரிக்கைகளை நான் சமர்ப்பிக்கிறேன்.

## வேளாண் மற்றும் விவசாயிகள் நலம்

**11.** பொருளாதார முன்னேற்றத்திற்கு வேளாண்மை முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். வேளாண்மைத் தொழில், வேலைவாய்ப்பு மற்றும் உணவுப்பாதுகாப்பிற்கு வழிவகுப்பதுடன் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்திற்கு முக்கிய பங்காற்றி அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு முக்கிய காரணியாக திகழ்கிறது.

**12.** வேளாண் மேம்பாட்டிற்காக எனது அரசால் தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்கள் நடப்பு நிதியாண்டிலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.

பொதுமக்கள் காய்கறி சாகுபடி செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு “என் வீடு என் நிலம்” என்ற திட்டத்தினை பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் இவ்வாட்சிப்பரப்பில் சோதனை முறையில் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின்கீழ், பொதுமக்கள் தங்கள் வீட்டின் மாடியில் காய்கறி தோட்டம் அமைப்பதற்காக ₹ 5,000 மதிப்பிலான தோட்டக்கலை இடுபொருட்கள் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் வழங்கப்படும். மேலும், இதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் 2023-24ஆம் நிதியாண்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையம் மூலமாக வருகின்ற ஆடிப் பட்டம் முதல் இத்திட்டம் முழு வீச்சில் நடைமுறைப்படுத்தப்படும்.

**13.** மேலும், எனது அரசு, புதுச்சேரியில் உள்ள அரசு பள்ளிகளில் மாணவர்களின் பங்களிப்புடன் பள்ளி வளாகத்தில் காய்கறி மற்றும் சத்துணவு தோட்டம் அமைத்திட ஒரு சதுர அடிக்கு ₹ 2.50 என்ற அளவில் அதிகபட்சமாக 4,000 சதுர அடி வரை அல்லது பள்ளி ஒன்றுக்கு ₹ 10,000 என்ற அளவில் ஊக்கத்தொகை வழங்குவதற்கான புதிய திட்டத்தினை நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளது. காரைக்கால் பகுதியில் விவசாயிகளின் நிலங்களில் உள்ள கருவேல மரங்களை அழித்து மீண்டும் சாகுபடிக்கு ஏற்றவாறு நிலத்தினைத் தயார் செய்வதற்கு மானியமாக ஹெக்டேருக்கு ₹ 15,000 வழங்கும் திட்டம்

செயல்படுத்தப்படும். கருவேல மரக்கழிவில் இருந்து இயற்கை வேளாண்மையின்கீழ் பயன்படுத்தப்படும் உயிர் உரங்கள் தயாரிப்பது குறித்து செயல் விளக்கங்கள் நடப்பாண்டில் நடத்தப்படும்.

**14.** மத்திய அரசின் பிரதம மந்திரி கிசான் உர்ஜா சுரக்ஷா ஏவம் உத்தான் மகாபியன் (PM-KUSUM) திட்டத்தின்கீழ், சூரிய சக்தியில் இயங்கும் பம்ப்செட் நிறுவுவதற்காக வழங்கப்படும் 30 விழுக்காடு மானியம் 100 விழுக்காடாக வழங்கப்படும். இதன் மூலம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதற்காக ஆண்டு தோறும் செலவிடப்படும் சுமார் ₹ 5.50 கோடி அளவில் அரசின் நிதிச் சுமை குறையும். இந்தத் திட்டம் மூன்று ஆண்டுகளுக்குப் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படும்.

**15.** விவசாயிகளுக்கு நியாயமான ஆதார விலையை உறுதி செய்யும் பொருட்டு அவர்கள் உற்பத்தி செய்யும் நெல்லின் தரத்தை இந்திய உணவுக் கழகம் (Food Corporation of India) மூலம் கொள்முதல் செய்வதற்குத் தேவையான அளவிற்கு உயர்த்த, அறுவடைக்குப் பிந்தைய செயல்பாடுகளுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்படும். இதன் மூலம் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பிராந்திய விவசாயிகளிடமிருந்து முறையே 10,000 மற்றும் 20,000 மெட்ரிக் டன் நெல் இந்திய உணவுக் கழகம் மூலம் கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**16.** கொடிவகை காய்கறிகளின் சாகுபடியை ஊக்குவிக்க ஒரு விவசாயிக்கு குறைந்தபட்சம் 10 ஆர் முதல் அதிகபட்சம் 2 ஏக்கர் பரப்பளவு வரை நிரந்தர பந்தல் அமைப்பதற்கு ஒரு விவசாயிக்கு ஏக்கருக்கு ₹ 1 இலட்சம் சாகுபடிக்குப் பிந்தைய மானியமாக வழங்கப்படும்.

**17.** வேளாண் காடுகளை மேம்படுத்த தலா ₹ 16 இலட்சம் செலவில் புதுச்சேரி பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் மணப்பட்டு வனப் பகுதி நிலத்தில் தலா ஒரு ஹெக்டேர் பரப்பளவில் ஒரு இலட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்யும் வகையில் இரண்டு பெரிய நாற்றங்கால்கள் அமைக்கப்படும். வேளாண்மையில் இயந்திரங்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கவும் நவீன உபகரணங்களை விவசாயிகள் பயன்படுத்தி வேளாண் உற்பத்தித் திறனை அதிகரிக்க வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டத்தின்கீழ் மானியம் வழங்கப்படும்.

**18.** வேளாண் மற்றும் விவசாயிகள் நலனுக்காக, 2024-25ஆம் நிதியாண்டில் ₹ 171.22 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கால்நடைப் பராமரிப்பு மற்றும் கால்நடை நலம்**

**19.** கால்நடை வளர்ப்பு வேளாண்மையின் ஒரு முக்கிய அங்கமாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.

மேலும், இத்துறையில் உற்பத்தியை பெருக்குதல், நோய்க்கட்டுப்பாடு, தீவன உற்பத்தி, மதிப்பு கூட்டுப் பொருட்களை உருவாக்குதல் மற்றும் அறிவியல் ரீதியான இனப்பெருக்க முறைகள் ஆகியவற்றிற்கு புதிய திட்டங்களை கொண்டுவர எனது அரசு ஆர்வமாக உள்ளது.

**20.** கால்நடை விவசாயிகளுக்கு, தரமான கால்நடை மருத்துவ சேவை மற்றும் கால்நடைப் பராமரிப்புக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, தற்போதுள்ள கால்நடை கிளை அபிவிருத்தி நிலையங்களைச் சிறு கால்நடை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இனப்பெருக்கத் திறனை மேம்படுத்தவும் பெண் கன்றுகளின் பிறப்பு விகிதத்தை அதிகரிக்கும் பொருட்டு, இனம் பிரிக்கப்பட்ட விந்தணு ஊசி மூலம் பெண் கன்றுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் துரித இன மேம்பாட்டுத் திட்டமான ராஷ்ட்ரிய கோகுல் மிஷன் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதுபோன்று, செயற்கைமுறை கருத்தரித்தல் திட்டத்தின்மூலம் 90 விழுக்காடு உயர் மரபணு திறன் கொண்ட 1,000 பெண் கன்றுகளை உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே, புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் மட்டும் தான் இத்திட்டமானது 100 விழுக்காடு மானியத்தில் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**21.** முதன்முறையாக 400 கால்நடை விவசாயிகளுக்கு தீவன உருண்டை செய்யும் இயந்திரம் 100 விழுக்காடு மானியத்தில் வழங்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. 10,000 அசில் கோழிக்குஞ்சுகள் தகுதியுள்ள விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானியத்துடன் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**22.** இவ்வாட்சிப்பரப்பில் பால் உற்பத்தியில் தன்னிறைவை அடைய எனது அரசு தொடர்ந்து முயன்று வருகிறது. இந்த இலக்கை அடையும் பொருட்டு 50 விழுக்காடு மானியத்தில் 1,000 விவசாயிகளுக்கு கறவை பசுக்கள் வழங்க உத்தேசித்துள்ளது.

**23.** இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியை உயர்த்தும் பொருட்டும் மற்றும் புறக்கடை கோழி வளர்ப்பினை ஊக்குவிப்பதற்காகவும் கோழி வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 50 விழுக்காடு மானியத்தில் கோழிகள், கூண்டுகள் மற்றும் தீவனங்கள் ₹ 7,500 மதிப்பில் வழங்கப்படும்.

**24.** கிராமப்புற பெண்கள் மற்றும் மாணவர்களிடம் நல்ல வரவேற்பை கருத்தில் கொண்டு, 17,000 வான்கோழிக் குஞ்சுகள் 50 விழுக்காடு மானியத்தில் இந்த நிதியாண்டில் விவசாயிகளுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது காப்பீடு செய்யப்படாத பசுக்கள் இறக்க நேரிட்டால் ₹ 6,000 இழப்பீடாக கால்நடை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதனை உயர்த்தி இந்த நிதியாண்டில் இருந்து ₹ 25,000 ஆக வழங்க எனது அரசு உத்தேசித்துள்ளது.

**25.** 2024-25 நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 76.56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கலை மற்றும் பண்பாடு**

**26.** பாரம்பரியக் கலைகளான கரகாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், நாதசுரம், பறை ஆகியவற்றில் சிறந்து விளங்கும் கலைஞர்களை அடையாளங்கண்டு ஊக்கப்படுத்த தென்னகப் பண்பாட்டு மையத்தின் உதவியுடன் சிறப்புக் கவனம் அளிக்கப்படும்.

**27.** மத்திய அரசின் நிதி உதவியுடன் கீழூர் நினைவுச்சின்னம் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளுடன் புனரமைக்கப்படும். இந்தியத் தொல்லியல் துறையினர் உதவியுடன் புதுச்சேரி அரிக்கமேட்டில் ஒரு விளக்க வழிகாட்டுதல் மையம் ரோமன் சரக்குக் கப்பல் மாதிரி வடிவில் அமைக்கப்படும். பொதுமக்கள் மற்றும் தேசியப் பேரிடர்களால் பாதிக்காதவாறு இந்த நினைவுச் சின்னத்தைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**28.** புதுச்சேரியின் கலை மற்றும் கலாச்சார பாரம்பரியத்திற்கான சர்வதேச அறக்கட்டளை (INTACH) அமைப்பின் உதவியுடன் புதுச்சேரியின் கலாச்சார கட்டிடங்களைப் பராமரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். காரைக்கால் பிராந்தியத்திற்கென தனியாக ஒரு “அருங்காட்சியகம்” காரைக்கால் பழைய நீதிமன்ற வளாகத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**29.** “புதுவைக் கலைமாமணி” விருது வழங்குவதில் புகைப்படக் கலையும், பேச்சுக் கலையும் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், மகாகவி பாரதியார் மற்றும் பாவேந்தர் பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகத்தில் ஒளி–ஒலி காட்சி அமைப்பு, ஒலிப்பதிவு, மாணவர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் மற்றும் கவிஞர்களின் அனைத்து படைப்புகளும் தொகுக்கப்பட்டு மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**30.** புதுச்சேரியில் கலாச்சாரக் கலைகளை மேம்படுத்தவும், கலைஞர்களை ஊக்குவிக்கவும் புதுச்சேரிக்கான கலாச்சாரக் கொள்கையை வகுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரியில் ஒளி–ஒலி நிகழ்ச்சி நடத்தவும் மாநில அளவிலான கலாச்சார விழா நடத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**31.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 32.75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள்**

**32.** பொது விநியோக அமைப்பில் தொழில்நுட்பம் மூலம் நவீனமயமாக்கல் மற்றும் சீர்திருத்தங்களுக்கான திட்டமான ஸ்மார்ட்–பிடிஎஸ் (SMART-PDS) நடப்பு நிதியாண்டு முதல் புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் செயல்படுத்தப்படும்.

உணவு தானியம் விரயமாகுதலை தடுத்தல் மற்றும் விநியோக முறையைத் திறம்பட நடைமுறைப்படுத்தவும் SMART-PDS திட்டம் ஒரு முன்னோடி முயற்சியாகும். இந்த தொழில்நுட்ப அடிப்படையிலான திட்டம் உணவுப்பொருள் விநியோகத்தை ஒரு ஒற்றைத் தளத்தின் கீழ்க் கொண்டு வருகிறது. கொள்முதல் நிலையில் இருந்து விநியோகம் வரை நிகழ் நேர அடிப்படையில் உணவு தானிய இயக்கத்தை கண்காணிக்க இம்முறை உதவும்.

**33.** எனது அரசு, நடப்பு நிதியாண்டு முதல், இலவச அரிசி மற்றும் மானிய விலையில் பருப்பு, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் ஆகிய உணவுப்பொருட்கள் வழங்கவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**34.** பொதுச் சேவை மையம் மூலம் குடிமைப் பொருள் வழங்கல் அட்டை தொடர்பான அனைத்து சேவைகளும் இணையதளம் மூலம் வழங்கப்படும். (i) புதிய உணவுப் பங்கீட்டு அட்டை வழங்கல், (ii) பெயர்களை சேர்த்தல், நீக்குதல் மற்றும் (iii) உணவுப் பங்கீட்டு அட்டையை ஒப்படைத்தல் உள்ளிட்ட சேவைகள் பொதுச் சேவை மையம் மூலம் வழங்கப்படும்.

**35.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 276.56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கூட்டுறவு**

**36.** எனது அரசு பால் உற்பத்தியை அதிகரித்திட, தொடக்க கூட்டுறவு பால் உற்பத்தி சங்கத்திற்கு பால் வழங்கும் உறுப்பினர்களுக்கு 75 விழுக்காடு மானியத்தில் மாட்டுத் தீவனத்தை புதுச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் மூலம் வழங்க உத்தேசித்துள்ளது. இதன்மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு உற்பத்தி செலவு குறையும்.

**37.** நடப்பு நிதியாண்டில் பால் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து பாண்லேவிற்கு சுமார் 2.34 கோடி லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கொள்முதல் செய்யப்படும் பால் அளவில் 5 விழுக்காடு ஊக்கத்தொகை வழங்கப்படும்.

**38.** புதுச்சேரி லிங்காரெட்டிப்பாளையம் சர்க்கரை ஆலையில் தனியார் பங்களிப்புடன் எத்தனால் மற்றும் சர்க்கரை உற்பத்திக்காக ஆலையை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனது அரசு கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்தி அனைத்து கூட்டுறவு அமைப்புகளையும் தன்னிறைவான அமைப்புகளாக மாற்றிட முயற்சிகளை எடுத்து வருகிறது. இதற்காக சில கூட்டுறவு சங்கங்களுக்கு முந்தைய ஆண்டில் வழங்கப்பட்ட கடனில் குறைந்தபட்சம் 10 விழுக்காடு அளவிற்கு வருவாய் ஈட்டும் சங்கங்களுக்கு கொடையாக மாற்றி வழங்கப்படும்.

**39.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 59.49 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பள்ளிக்கல்வி**

**40.** கல்வி, அறிவையும் திறனையும் உயர்த்தி சமுதாயத்தில் உயர்ந்த நிலையை அடைய உதவுகிறது. தரமான கல்வி நல்ல வேலைவாய்ப்புகளை வழங்குகிறது. இதன் மூலம் ஏழை மக்கள் தங்கள் வறுமை நிலையில் இருந்து மீண்டு, வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள பெரிதும் வழிவகுக்கிறது. எனவே, இவ்வாட்சிப்பரப்பில் உள்ள அனைவருக்கும் தரமான கல்வி வழங்குவதை உறுதி செய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு எடுத்து வருகிறது.

**41.** அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவச புத்தக பைகள் மற்றும் காலணிகள் (Shoes) வழங்க எனது அரசு உத்தேசித்துள்ளது. பிராந்திய அளவில் பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெறும் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு முறையே தலா ₹ 20,000, ₹ 15,000 மற்றும் ₹ 10,000 ஊக்கத்தொகை வழங்கப்படும். மேலும், பாடப்பிரிவு வாரியாக நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெறும் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு ₹ 5,000 ஊக்கத்தொகை வழங்கப்படும்.

**42.** எனது அரசு அனைத்து அரசுப் பள்ளிகளின் பாடத்திட்டங்களையும் மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின்(CBSE) பாடத்திட்டத்திற்கு மாற்றியுள்ளது. எனவே, CBSE-இன் விதிமுறைகளின்படி 126 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தீ பாதுகாப்பு உபகரணங்கள் நிறுவப்படும். புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் முன் மழலையர் வகுப்புகள் உள்ள அனைத்துத் தொடக்க பள்ளிகளிலும் முன் மழலையர் பராமரிப்பு மற்றும் கல்வி வள மையம்(ECCE Resource Centre) அமைக்கப்படும். புதுச்சேரி பிராந்தியத்தில் உள்ளது போல காரைக்கால் மற்றும் மாகி பகுதிகளிலும் புதியதாக "நவீன சமையல் கூடங்கள்" நிறுவப்படும்.

**43.** அரசு பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை தொடர்ந்து படிக்கும் மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் 10 விழுக்காடு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். 2023-24ஆம் ஆண்டில் இந்த ஒதுக்கீடு மூலமாக 20 மாணவர்கள் பயன்பெற்றனர். அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் NEET தேர்வில் தேர்ச்சி பெரும் விகிதத்தை மேலும் உயர்த்தும் பொருட்டு நடப்பாண்டு முதல் பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கும் NEET பயிற்சி அளிக்க உத்தேசித்துள்ளது.

மேலும், கிராமப்புற மாணவர்கள் NEET பயிற்சி மையத்தில் சேர்ந்து பயனடையும் வகையில் தற்போது நகர்ப்புறங்களில் இருக்கும் இரண்டு NEET பயிற்சி மையங்களுடன் மேலும் இரண்டு பயிற்சி மையங்கள் கிராமப்புறங்களில் அமைக்கப்படும்.

**44.** நடப்பு நிதியாண்டில் பள்ளிக்கல்விக்காக ₹ 952.51 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி**

**45.** உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் மிக முக்கிய பங்கினை ஆற்றி வருகிறது. மேலும், தொழிற்சாலைகளுக்கு அதிகத் தரமான தொழில்நுட்ப அறிவுடைய மனித ஆற்றலையும் தேவையான தொழில்நுட்ப விவரங்களையும் அளித்து வருகிறது.

**46.** CENTAC மூலம் தேர்வு செய்யப்பட்டு மருத்துவ, பொறியியல் மற்றும் செவிலியர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் பெருந்தலைவர் காமராஜர் மாணவர் கல்வி நிதி உதவி தொடர்ந்து வழங்கப்படும். இதன் மூலம் மருத்துவம் பயிலும் 650 மாணவர்களும், பொறியியல் பயிலும் 5,600 மாணவர்களும், நர்சிங் பயிலும் 700 மாணவர்களும் ஆக மொத்தம் 6,950 மாணவர்கள் பயனடைவர்.

**47.** கல்வி நிறுவனங்களை வலுப்படுத்தும் விதமாக எனது அரசு மடுகரைப் பகுதியில் உள்ள ஒரு மேல்நிலைப்பள்ளியை ₹ 15 கோடி செலவில் இந்த நிதியாண்டில் முன்மாதிரிக் கலைக் கல்லூரியாக (Model Degree College) மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளது. மேலும், மத்திய அரசின் பங்களிப்புடன் புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் 11 கல்லூரிகளைத் தலா ₹ 5 கோடி செலவில் தரம் உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**48.** அரசு கல்லூரிகளில் கல்வித்தரத்தை உயர்த்தும் பொருட்டு காலியாக உள்ள பணியிடங்கள் இந்த ஆண்டில் நிரப்பப்படும்.

**49.** நடப்பு நிதியாண்டில் உயர்கல்விக்காக ₹ 330.92 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**விளையாட்டு மற்றும் இளைஞர் நலம்**

**50.** எனது அரசு கல்வி மட்டுமல்லாமல் விளையாட்டு மற்றும் இளைஞர் நலனை மேம்படுத்த பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

**51.** பள்ளிக்கல்வித் துறையின்கீழ் இயங்கி வந்த “விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்”, தனி இயக்குனரகமாக உருவாக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

**52.** புதுச்சேரி இந்திரா காந்தி விளையாட்டு வளாகத்தில் ஒரு கோடி மதிப்பீட்டில் செயற்கை ஹாக்கி திடல் (Artificial Hockey Field) அமைக்கப்படும். காரைக்கால் T.R. பட்டினத்தில் நிறுவன சமூக பங்களிப்பு நிதியின்கீழ் (CSR) ஒரு கோடி மதிப்பீட்டில் பன்னோக்கு உள்விளையாட்டு அரங்கம் நடப்பு நிதியாண்டில் கட்டி முடிக்கப்படும்.

**53.** விளையாட்டு வீரர்கள், பொதுமக்கள் குறிப்பாக குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் திறந்தவெளி விளையாட்டு திடல்கள், சிறு உள் விளையாட்டு அரங்குகள் அமைக்க உத்தேசித்துள்ளது. பல்வேறு விளையாட்டு பிரிவுகளில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல் உள்ளிட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல திட்டங்களை செயல்படுத்த இத்துறைக்கு ₹ 32.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மின்விசை**

**54.** இவ்வாட்சிப்பரப்பில் உள்ள மின்விநியோக கட்டமைப்புகளை மறுசீரமைக்கப்பட்ட மின்விநியோக திட்டத்தின்கீழ் (RDSS) ₹ 83.14 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ளது. இதற்கான 60 விழுக்காடு நிதி மத்திய அரசிடம் இருந்தும், மீதமுள்ள 40 விழுக்காடு இவ்வரசு நிதி நிறுவனங்களிடமிருந்து கடனாக பெறவுள்ளது. மேலும், ₹ 404.19 கோடி மதிப்பீட்டில் தற்போதுள்ள மின்விநியோக கட்டமைப்பை நவீனப்படுத்தவும், புதுப்பிக்கவும் மற்றும் திறன் அதிகரிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒரு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு விரைவில் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்படும்.

**55.** புதுச்சேரி தவளக்குப்பத்தில் ஒரு புதிய 110/22 KV துணை மின்நிலையம் நிறுவப்படும். மேலும், புதுச்சேரி இலாசுப்பேட்டையில் புதிய 110/22 KV வாயு காப்பு துணை மின்நிலையம் அமைக்கப்படும். இதற்குத் தேவையான நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், வில்லியனூர், காலாப்பட்டு, கோர்க்காடு, திருபுவனை மற்றும் தேத்தாம்பாக்கம் துணை மின் நிலையங்களின் திறன் ₹ 45.02 கோடி திட்ட மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். இந்தப் பணிகள் டிசம்பர் மாதம் 2025-ல் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**56.** கடந்த ஆண்டில், மின் துறையில் பணிபுரிந்த 176 கட்டுமான உதவியாளர்கள், உதவியாளர்களாக பணி உயர்வு செய்யப்பட்டனர். இதன் விளைவாக ஏற்பட்டுள்ள கட்டுமான உதவியாளர் காலி பணியிடங்களையும் ஏற்கனவே காலியாக உள்ள 73 இளநிலை மின் பொறியாளர் பணியிடங்களையும் நேரடி நியமனம் மூலம் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி நியமனங்கள் நடப்பாண்டிலேயே செய்து முடிக்கப்படும்.

**57.** வில்லியனூர் மற்றும் தொண்டமாநத்தம் துணை மின்நிலையங்களில் ₹ 20 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக 230/110KV திறன் கொண்ட மின் மாற்றிகள் நிறுவப்பட்டு அதனைச் சார்ந்த மின் வழித்தடங்கள் அமைக்கப்படும்.

மேலும், ₹ 21.64 கோடி திட்ட மதிப்பீட்டில் வெங்கட்டா நகர் 110 / 22-11 KV துணை மின்நிலையத்திலிருந்து ஜிப்மர் வளாகத்தில் உள்ள 110 / 22KV வாயு காப்பு துணை மின்நிலையம் வரை 110 KV புதை மின்வடங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**58.** நடப்பு நிதியாண்டில் மின் துறைக்காக ₹ 2802.65 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தீயணைப்பு**

**59.** பொது மக்களின் உயிர் மற்றும் அவர்களது உடமைகளுக்கு தீயினால் விபத்து ஏற்படும் பொழுதும் மற்றும் பேரிடர் காலங்களிலும் தீயணைப்புத் துறையின் சேவை மிகவும் மகத்தானது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். எனவே, எனது அரசு இத்துறையை நவீனமயமாக்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

**60.** எனது அரசு, முதல் முறையாக தீயணப்பு துறையில் உள்ள பல்வேறு பணியிடங்களில் பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் அரசாணை கடந்த நிதியாண்டில் வெளியிட்டது. இந்த காலிப்பணியிடங்கள் நடப்பு நிதியாண்டில் நிரப்பப்படும்.

**61.** புதுச்சேரி, வில்லியனூர், தவளகுப்பம், லிங்காரெட்டிப்பாளையம் மற்றும் கரையாம்புத்தூர் ஆகிய இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும், புதிய தீயணைப்பு நிலையங்களுக்குத் தேவையான பணியிடங்கள் உருவாக்கப்படும். புதுச்சேரி கோரிமேடு பகுதியில் கோட்ட தீயணைப்பு அதிகாரி அலுவலகம் கட்டப்படும்.

**62.** இத்துறையை மேலும் நவீனமயமாக்குவதற்காக நவீன ரோபோட்டிக் தீயணைப்பு கருவிகள் உள்ளிட்ட பல்வேறு புதிய தீயணைப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படும். ஐந்து சிறிய தீயணைப்பு வாகனம் மற்றும் மூன்று water bowser இந்த நிதியாண்டில் கொள்முதல் செய்யப்படும்.

**63.** நடப்பு நிதியாண்டில் தீயணைப்புத் துறைக்காக ₹ 31.19 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மீன்வளம் மற்றும் மீனவர் நலம்**

**64.** மீன்வளம், வளர்ந்து வரும் பொருளாதார முன்னேற்றத்திற்கு முக்கிய பங்கு வகிப்பது மட்டுமல்லாமல். மீனவர்களின் வேலைவாய்ப்பு மற்றும் வருமானத்திற்கு பெரிதும் உதவுகிறது. எனது அரசு மீனவ சமுதாய மக்களின் சமூக பொருளாதாரத்தை உயர்த்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

**65.** எனது அரசு, மீனவர்களின் கோரிக்கையை ஏற்று தற்போது வழங்கப்பட்டு வரும் மீன்பிடித் தடைக்கால நிவாரணமான ₹ 6,500-லிருந்து ₹ 8,000 ஆகவும், மழைக்கால நிவாரணமாக தற்போது வழங்கப்பட்டு வரும் ₹ 3,000-த்திலிருந்து ₹ 6,000 ஆகவும் உயர்த்தி வழங்கவுள்ளது என்பதை மகிழ்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் மூலம் அரசுக்கு ஆண்டுக்கு கூடுதலாக ₹ 9 கோடி செலவாகும்.

**66.** எனது அரசு புதியதாக 500 மீனவ பயனாளிகளுக்கு முதியோர் ஓய்வூதியம், 1,856 மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடி தடைக்கால நிவாரணம் மற்றும் 1,831 மீனவ குடும்பங்களுக்கு மழைக்கால நிவாரணம் வழங்க உத்தேசித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் அரசுக்கு ₹ 3.26 கோடி கூடுதலாக செலவாகும்.

**67.** புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து வகையான மீன்பிடி படகுகளுக்கும் 60 விழுக்காடு மானிய விலையில் மீன்பிடி சாதனங்களான வலை மற்றும் கயிறுகள் வாங்க மானியமாக ரூபாய் ஒரு கோடி ஒதுக்கப்படும். கட்டுமர மீனவர்களுக்கு உதவும் பொருட்டு ₹ 5,000 மதிப்புள்ள மீன்பிடி வலைகள் ஒவ்வொரு ஆண்டும் பதிவு செய்யப்பட்ட மோட்டார் பொருத்தாத கட்டுமர உரிமையாளர்களுக்கு வழங்கப்படும்.

**68.** புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு விசைப்படகு உரிமையாளர்கள், விபத்தின்போது ஏற்படும் சேதங்களை முழுமையாக பெறுவதற்கு படகுகளுக்கு செலுத்தப்படும் காப்பீட்டு சந்தாவில் 90 விழுக்காடு மானியமாக வழங்கும் குழு காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்த உத்தேசித்துள்ளது.

**69.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் உள்ள 100 கடல் மீனவர்களை மற்ற மாநிலங்களில் உள்ள மீன்பிடி துறைமுகங்களுக்கு அழைத்துச் சென்று அங்குள்ள மீன்வள தொழில்நுட்பம் மற்றும் சிறந்த நடைமுறைகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். உவர்நீர் மீன் மற்றும் இறால் வளர்ப்பு விவசாயிகள் தங்கள் பண்ணையில் உபயோகப்படுத்தப்படும் மின் இணைப்பிற்கு நுகர்வுக் கட்டணத்தில் 50 விழுக்காடு மானியத் தொகை விடுவிக்கப்படும்.

**70.** பிரதம மந்திரி மீன் வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (PMMSY) வெளிப்புற இயந்திரம் பொருத்தப்பட்ட மற்றும் இயந்திரம் பொருத்தப்படாத படகு உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் 40 விழுக்காடு மற்றும் 60 விழுக்காடு மானியம் நடப்பு ஆண்டு முதல் 100 விழுக்காடாக வழங்கப்படும். இதன் மூலம் மீனவர்கள் உயிர்ப்பாதுகாப்பு கருவிகளை இலவசமாக பெற முடியும். இத்திட்டம் புதுச்சேரி மாநில மீனவர் கூட்டுறவு சம்மேளனம் மூலமாக செயல்படுத்தப்படும்.

**71.** புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்களுக்கு டீசல் மானியம் லிட்டருக்கு ₹ 12 வழங்குவதுபோல் (வாட் மானியம் உட்பட) பதிவு செய்யப்பட்ட வெளிப்புற இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடி படகு உரிமையாளர்களுக்கு டீசல் மானியம் லிட்டருக்கு ₹ 12 வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அனைத்து மீனவக் கிராமங்களிலும் டீசல் விற்பனை நிலையங்கள் அமைத்தல் மற்றும் ஒவ்வொரு காலாண்டிலும் நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்களைக் கருத்தில் கொண்டு பதிவு செய்யப்பட்ட வெளிப்புற இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடி படகு உரிமையாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ₹ 60,000 டீசல் மானியம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**72.** புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள கடற்கரை கிராமங்களில் சமுதாயக்கூடம், வலைக்கூடம், ஏலக்கூடம் முதலிய உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். காரைக்கால் கடலோரப் பகுதியில் கடற்கரை பாதுகாப்புச் சுவர் மற்றும் கடலின் வளத்தை மேம்படுத்தவும் பல்லுயிர் காக்கவும் செயற்கை பாறைகள் அமைக்கப்படும்.

**73.** புதுச்சேரி மீன்பிடி துறைமுக வளாகத்தில் அமைந்துள்ள பனிக்கட்டி உற்பத்திக் கூடம் ₹ 40 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட விசைப்படகு உரிமையாளர்

சங்கத்திற்கு அரசு நிர்ணயிக்கும் குறைந்தபட்ச தொகையினை குத்தகைக்கு விடப்படும். பெரிய வீராம்பட்டினம் சமுதாயக் கூடம் புதுப்பிக்கப்பட்டு மீனவ இளைஞர்கள் பயனடையும் வகையில் உள்விளையாட்டு அரங்கமாக மாற்றப்படும். அனைத்துக் கடற்கரை கிராமங்களிலும் சுகாதாரத்தைப் பராமரிக்க பொதுக்கழிப்பறை கட்டப்பட்டு அந்தந்த கிராம மீனவர் அல்லது மீனவ மகளிர் கூட்டுறவு சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டு பராமரிக்கப்படும். இதற்காக ₹ 20 இலட்சம் நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்படும்.

**74.** மாகியில் உள்ள மீன்வளத்துறை உதவி இயக்குநர் அலுவலக வளாகத்தில் வணிக வளாகம் கட்டப்பட்டு மீனவர் அல்லது மீனவ மகளிர் கூட்டுறவு சங்கத்திடம் வருவாய் ஈட்டுவதற்காக ஒப்படைக்கப்படும். மீன் அல்லது இறால் வளர்ப்பு விவசாயிகளுக்கு மீன் வளர்ப்பிற்கு செலுத்தும் 40 விழுக்காடு காப்பீட்டுச் சந்தா தொகையை எனது அரசே ஏற்கும்.

**75.** நடப்பு நிதியாண்டில் மீன் வளம் மற்றும் மீனவர் நலனுக்காக ₹ 121.03 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுகாதாரம் மற்றும் குடும்ப நலம்**

**76.** புதுச்சேரி ஆட்சிப் பரப்பில் உள்ள அனைத்து மக்களுக்கும் குறிப்பாக ஏழை மக்கள் மற்றும் சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கும் தரமான சுகாதாரச் சேவை அளிப்பதை எனது அரசு முக்கிய குறிக்கோளாக கொண்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

**77.** சேதராப்பட்டில் ₹ 2.73 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம், தட்டாஞ்சாவடி மற்றும் கலிதீர்த்தாள்குப்பத்தில் ₹ 1.19 கோடி மதிப்பீட்டில் புதிய சுகாதார துணை மையங்கள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். மத்திய அரசின் ESI மூலமாக புதுச்சேரி கோரிமேட்டில் ESI மாதிரி மருத்துவமனை மற்றும் அரியாங்குப்பத்தில் 2 மருத்துவர்கள் கொண்ட ESI மருந்துவமனைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி, மாகி மற்றும் ஏனாம் பிராந்தியங்களில் உள்ள ESI பயனாளிகளுக்கு ஏதுவாக தனியார் மருத்துவமனைகளில் இரண்டாம் நிலை சிகிச்சை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**78.** இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்டமேற்படிப்பு நிறுவனத்தில் எலும்பு முறிவு மற்றும் பிற விபத்துகளால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்காக வலி நீக்கும் சேவைப் பிரிவு ஒன்றை தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போதுள்ள வலிசிகிச்சையகத்தை உயர் தெளிவுத்திறன் கொண்ட அல்ட்ரா சோனோகிராபி (Ultra Sonography), சி–ஆர்ம் (C-Arm), ரேடியோ அதிர்வெண் கருவிகள் மற்றும் PRP இயந்திரங்கள் போன்ற புதிய கருவிகளைக் கொண்டு மேம்படுத்தப்படும்.

**79.** இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்டமேற்படிப்பு நிறுவனத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக (i) முழு தானியங்கி நோயெதிர்ப்பு பகுப்பாய்வு (Fully Automated Immuno analyzer), (ii) முழு தானியங்கி மின்னோட்ட அலகு (Fully Automated Electrophoretic Unit), (iii) ஆஞ்சியோ பிளாஸ்டிக்குக்கான லேசர் த்ரோம்பெக்டாமி சாதனம் (Laser Thrombectomy Device for Angioplasty), (iv) 3D கலர் டாப்ளர் எக்கோ ஸ்கேனர் சிஸ்டம் (3D Colour Doppler Echo Scanner System) மற்றும் (v) விட்ரியோ விழித்திரை அறுவை சிகிச்சைக்காக பின்புற அறுவை சிகிச்சை உபகரணங்கள் மற்றும் லேசர் பார்வை திருத்தும் கருவிகள் கொள்முதல் செய்யப்படும்.

**80.** நரம்பியல் துறையில் குழந்தைகள் நரம்பியல் பிரிவு உட்பட 24 மணி நேரமும் உள் நோயாளிகள் சேர்க்கைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மயக்கம் மற்றும் தெளிவற்ற குரலுக்கு சிகிச்சையளிக்க முழு அளவிலான வெர்டிக்கோ ஆய்வகம் அமைக்கப்படும். இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்டமேற்படிப்பு நிறுவனத்தில் சிறுநீரகவியல் துறையில் லேப்ராஸ்கோபிக்கான உயர்வகை கேமரா, தற்போதுள்ள ESWL இயந்திரத்தை தரம் உயர்த்துதல் மற்றும் ரோபோட்டிக் அறுவை சிகிச்சை அறிமுகப்படுத்தப்படும்.

**81.** எனது அரசு கரிக்கலாம்பாக்கம் சமுதாய நல மையத்தில் (Community Health Centre) புதிய டயாலிசிஸ் பிரிவைத் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பரந்த அளவிலான கண்தானம் மற்றும் பார்வை மறுசீரமைப்பு சேவைகளை பொதுமக்களுக்கு வழங்குவதற்காக தற்போதுள்ள கண்தான மையத்தை கண் வங்கியாக தரம் உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**82.** எனது அரசு, பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று காரைக்கால் பிராந்தியத்தில் தற்போது இயங்கி வரும் அரசு பொது மருத்துவமனைக்கு புதியதாக கட்டடம் கட்டப்படும் என்பதை மாண்புமிகு பேரவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**83.** எனது அரசு புதுச்சேரி பிராந்தியத்தில் ஆயுஷ் மருத்துவப் பூங்கா (Ayush Medical Park) ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், ஆயுர்வேதம் மற்றும் சித்த மருந்துகள் உற்பத்திப் பிரிவை நடப்பு நிதியாண்டில் நிறுவ உத்தேசித்துள்ளது. தேசிய சுகாதார ஆயூஷ் திட்டத்தின்கீழ் பள்ளி சுகாதார திட்டமான "ஆயுர்வித்யா" விரைவில் நடைமுறைப்படுத்தப்படும். மருத்துவ வசதிகளை விரிவுபடுத்துவதற்காக, ரெட்டியார்பாளையம், காந்திநகர் மற்றும் கோரிமேடு ESI மருத்துவமனைகளில் ஆயுஷ் மற்றும் யோகா பிரிவுகள் நிறுவப்படும். இலாசுப்பேட்டை, அரியாங்குப்பம், கோரிமேடு, திருக்கனூர், காரைக்கால் மற்றும் மாகி பந்தக்கல் ஆகிய இடங்களில் புதிய நலவழி ஓமியோபதி மையங்கள் தொடங்கப்படும்.

**84.** மாகி ராஜீவ் காந்தி ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் (RGAMC&H) பஞ்சகர்மா மற்றும் பிசியோதெரபி மையங்கள் நிறுவப்படும். ஏனாம், அரியாங்குப்பம் மற்றும் இலாசுப்பேட்டையில் புதிய சித்தா பிரிவுகள் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், தேசிய ஆயுஷ் திட்டத்தின் நிதி உதவியுடன் ராஜீவ் காந்தி ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் (RGAMC&H) பட்டமேற்படிப்பு படிப்புகள் தொடங்கப்பட்டு தரம் உயர்த்தப்படும். தேசிய ஆயுஷ் மிஷன் (NAM) நிதி உதவியுடன் ஒருங்கிணைந்த ஆயுஷ் கல்வி நிறுவனம் புதுச்சேரியில் நிறுவப்படும்.

**85.** பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்திலும், இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனையிலும் ஓமியோபதி மருத்துவப் பிரிவுகளும் மருந்தகங்களும் தொடங்கப்படும். மத்திய ஹோமியோபதி ஆராய்ச்சி குழுமத்தின் (CCRH) உதவியுடன் ஹோமியோபதி மருத்துவ தாவர வாரியம் அமைக்கப்படும்.

**86.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 1,111.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தகவல் தொழில்நுட்பம்**

**87.** நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தகவல் தொழில்நுட்பம் இன்றியமையாததாகிறது. பொது மக்கள் அரசின் பல்வேறு சேவைகள் எளிதில் பெறுவதற்கும் மற்றும் அரசின் திட்டங்களை பற்றி அறிந்து கொள்வதற்கும் தகவல் தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிக்கிறது.

எனவே, எனது அரசு புதிய தகவல் தொழில்நுட்பங்களை அரசின் பல்வேறு துறைகளில் புகுத்தி இவ்வாட்சிப்பரப்பை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

**88.** தற்போது, அரசின் பல்வேறு சேவைகளை பொதுமக்கள் இணையவழி சேவை மூலம் பெற்று பயனடைந்து வருகின்றனர். இதனை மேம்படுத்தும் பொருட்டு, மேலும் அரசின் பல சேவைகள் இணையவழி மூலம் பொது மக்களுக்கு கிடைக்க வழிவகை செய்யப்படும். சீர்மிகு வகுப்பறைகள், துல்லியமான விவசாயம், போக்குவரத்து கண்காணிப்பு, மீன்பிடி மற்றும் மீனவர் பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்த 5G தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்படும்.

**89.** பொறியியல், தொழில்நுட்பம், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் “டிஜிட்டல் தொழில்முறைக் கற்றல் திட்டம்” (Digital Internship Scheme) மூலம் வளர்ந்து வரும் புதிய தகவல் தொழில்நுட்பப் பிரிவுகளில் பயிற்சி பெற தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்ப பயிற்சிக்கூடம் அமைக்கப்படும்.

**90.** மின்னணு மற்றும் தகவல் தொழிநுட்ப அமைச்சகத்தின் செயலிகளான (i) டிஜி லாக்கர் (Digilocker) மூலம் அரசின் ஆவணங்களை, மின்னணு முறையில் சேமிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்படும் மற்றும் (ii) உமாங் (UMANG) கைப்பேசி செயலி மூலம் அனைத்து அரசுத் துறைகளின் சேவைகளை ஒருங்கிணைந்த முறையில் பொதுமக்கள் எளிதில் பெற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**91.** அரசு ஊழியர்களின் பணி சம்பந்தமான தகவல்களை (Service Book) பராமரிக்க எனது அரசு மின்னணு-மனிதவள மேம்பாட்டு செயலி (e-HRMS)-யை நடைமுறைப்படுத்த உள்ளது. இணைய பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு தகவல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் இணைய பாதுகாப்புப் பிரிவு (Cyber Security) அமைக்கப்படும்.

**92.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 17.56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இந்து சமய நிறுவனங்கள் மற்றும் வக்ஃபு

**93.** புதுச்சேரி அரசின் கட்டுப்பாட்டில் வரும் அனைத்து கோயில்களின் கடவுள் திருஉருவச்சிலைகள், தங்கம், வெள்ளி ஆபரணங்கள் மற்றும் இதர அசையும் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் மின்னணு (டிஜிட்டல்) முறையில் தயாரிக்கப்பட்டு அவை பொதுமக்கள் பார்வைக்காக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

**94.** மேலும், கோயில் நில சொத்துக்களின் நில அளவை கணக்கிடப்பட்டு பாதுகாக்கப்படும். குத்தகைக்கு விடப்பட்ட கோயில் சொத்துக்களுக்கு முறையான வாடகை வசூலிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**95.** நடப்பு நிதியாண்டில் இந்து சமய நிறுவனங்கள் மற்றும் வக்ஃபு வாரியத்திற்காக ₹ 5.87 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழில்கள் மற்றும் வணிகம்**

**96.** தொழில்துறையானது உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவித்தல், வேலைவாய்ப்பை உருவாக்குதல், வருமானத்தை ஈட்டுதல் ஆகியவற்றினை மேம்படுத்தி ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகிறது.

**97.** மத்திய அரசு புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் ₹ 105 கோடி மதிப்பீட்டில் பிரதம மந்திரி ஏக்தா மால் (PM-Ekta Mall) அமைக்க கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது. நமது ஆட்சிப்பரப்பில் காகிதக்கூழ் கைவினைப் பொருட்கள், சுடுமண் மற்றும் கலை மட்பாண்டங்கள், மென்பொம்மைகள், கற் செதுக்குதல், தேங்காய் ஓடு கைவினைப்பொருட்கள், அலங்கார மற்றும் கல்வி சார்ந்த மர பொம்மைகள், பின்னல் கலைப் பொருட்கள், கலை நயத்துடன் கூடிய வாசனை மெழுகுவர்த்திகள் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கைவினைப் பொருட்களை தயாரிக்கும் கலைஞர்கள் உள்ளனர். மேலும், காகித கைவினைப் பொருட்கள் மற்றும் சுடு மட்பாண்ட தயாரிப்புகள் புவியியல் குறியீடு கொண்டவையாகும். PM-Ekta Mall அமைப்பதன் மூலம் உள்ளூர் கைவினைத் தயாரிப்புகளை நாம் எளிதாக நேரடியாக சந்தைப்படுத்த முடியும். மேலும் உள்ளூர்வாசிகள் பிற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பாரம்பரியமான கைவினை மற்றும் கைத்தறி பொருட்களை எளிதாக சந்தைப்படுத்த இயலும்.

**98.** எனது அரசு மென்பொருள் பூங்காக்கள், மருந்து உற்பத்தி நிறுவனங்கள், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் மற்றும் வாகன உற்பத்திக்குத் தேவையான துணை நிறுவனங்கள் ஆகியவற்றை மேம்படுத்த கவனம் செலுத்தி வருகிறது. தொழில் முனைவோர்கள் புதிய தொழிற்சாலைகள் தொடங்குவதை ஊக்குவிக்க எனது அரசு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது.

(i) சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு உற்பத்தி தொடங்கி முதல் மூன்று ஆண்டுகளுக்கு உரிமங்கள் பெறுவது மற்றும் ஆய்வுகளில் இருந்து விலக்கு அளிக்கும் சட்டம் 2024 (Exemption from approvals to Commence Business for Micro, Small and Medium Enterprises Bill 2024) இயற்றி விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.

(ii) அரசுத் துறைகளில் கால வரையறையோடு சேவைகளை வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு "புதுச்சேரி எளிதான வணிகம் (சேவை வழங்குதல்) சட்டம் 2024" The Puducherry Ease of doing business (Service delivery. Bill 2024) என்ற சட்டத்தை விரைவில் இயற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(iii) புதிய தொழில் தொடங்கவும் மற்றும் இயங்கிவரும் தொழில்களை விரிவாக்கம் செய்ய விரும்பும் தொழில் முனைவோருக்கு நிலம் மற்றும் கட்டிடங்களை வாங்குதல்,

அடமானம், நில அடமானம் மற்றும் கிடங்குகள் ஆகியவற்றுக்கான முத்திரைத்தாள் தீர்வுத் தொகையை தொழில் முனைவோருக்கு 100 விழுக்காடு முழுமையாக திருப்பி அளிப்பதற்கான அரசாணை விரைவில் வெளியிடப்படும்.

(iv) Start-ups-ஐ பலப்படுத்த ஒரு பிரத்தியேக முறை (separate mechanism) உருவாக்கப்படும்.

(v) கரசூர் மற்றும் சேதராப்பட்டு கிராமங்களில் பல்துறை தொழிற்பேட்டையை நிறுவதற்கான வரைபடம் (Master Plan) தயாரிக்கப்பட்டு அதற்குண்டான வேலைகள் நடந்து வருகிறது.

**99.** எனது அரசு, காலியாக உள்ள அரசுத்துறை நிறுவனங்களின் நிலங்களை தொழில் மேம்பாடு மற்றும் வியாபார நோக்கத்திற்காக அதாவது மேம்படுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள், உலகளாவிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான கைவினை முனையங்கள், நிதி தொழில்நுட்ப முனையங்கள் ஆகியவற்றின் மூலம் படித்த தொழில்நுட்ப திறன்கொண்ட புதுவையின் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கவும் மேம்பட்ட தொழில் நிறுவனங்கள் குறைந்த நிதி உதவியுடன் புதுச்சேரி மக்களை பணியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**100.** 2024-25ஆம் நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 67.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழிலாளர் மற்றும் தொழிலாளர் நலம்**

**101.** எனது அரசு அனைத்து தரப்பு தொழிலாளர்களின் நல்வாழ்வினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாட்சிப்பரப்பின் தொழில்துறை மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு தொழிலாளர் நலன் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், மாநிலத்தின் வளம், உடல்நலம். பொருளாதார மேம்பாடு மற்றும் மனித வள மேம்பாட்டிற்கு அவசியமாகிறது.

**102.** தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை அரசு கடைசியாக 2017-ஆம் ஆண்டு நிர்ணயித்து இருந்தது. அதன்படி 19 வகையான வேலைகளுக்கு குறைந்தபட்ச ஊதியம் ₹ 5,220 முதல் ₹ 13,000 ஆக வெவ்வேறு வேலைக்கு தகுந்தாற்போல் இருந்தது. இதனை எனது அரசு குறைந்தபட்ச ஊதியத்தை ₹ 5,220த்திலிருந்து ₹ 9,940 ஆக 90 விழுக்காடு உயர்த்தியும், ₹ 13,000த்திலிருந்து ₹ 23,790-ஆக 83 விழுக்காடு உயர்த்தியும் ஒப்புதல் வழங்க உத்தேசித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**103.** தற்போது புதுச்சேரி, காரைக்கால் பகுதியில் மாதிரித் தொழில் மையங்கள் இயங்கி வருகின்றன. இந்திய அரசு இவ்வாண்டு மாகி மற்றும் ஏனாம் ஆகிய பிராந்தியங்களிலும் மாதிரி தொழில் மையங்கள் அமைப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இம்மாதிரி தொழில் மையம் மாகியில் பல்லூர் ஜவஹர் பால்பவனிலும், ஏனாமில் NSC போஸ் அரசு I.T.I.யிலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**104.** முருங்கப்பாக்கத்தில் அமைந்துள்ள புதுச்சேரி விடுதி மேலாண்மை மற்றும் உணவு தயாரித்தல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (Puducherry Institute of Hotel Management and Catering Technology) வளாகத்தில் சுற்றுலா மற்றும் விருந்தோம்பலில் சிறந்து விளங்க திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் மையம் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் தொழிற்சாலைகள், கடைகள் மற்றும் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்குதல், புதுப்பித்தல் முதலிய வணிகரீதியிலான சேவைகள் அனைத்தும் ஆன்லைன் மூலம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**105.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 45.16 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உள்ளாட்சி**

**106.** குடிநீர் விநியோகம், துப்புரவு, கழிவுநீர் வடிகால் வசதி, தெருவிளக்குகள், குப்பைகளைச் சேகரித்து அகற்றல், பொது இடங்களைப் பராமரித்தல் ஆகியவை ஒரு நல்ல வாழ்வியல் முறைக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஆகும் என்பதை அனைவரும் நன்கு அறிவர்.

**107.** எனது அரசு புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் தற்போது நடைமுறையில் உள்ள நகர்ப்புற அடிப்படை வசதிகளை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை முன்னெடுத்துள்ளது. இதன் ஒரு பகுதியாக, புதுச்சேரி மற்றும் உழவர்கரை நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நகர்ப்புற தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ், ₹ 58.75 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த திடக் கழிவு மேலாண்மை நடைமுறைப்படுத்தப்படும். மேலும், மாகி மற்றும் ஏனாம் பிராந்தியத்தில் ₹ 24.35 கோடி மதிப்பீட்டில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் முறையே 0.5 MLD மற்றும் 6 MLD அளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**108.** அம்ரூத் (AMRUT 2.0) திட்டத்தின்கீழ் பல்வேறு உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அம்ரூட் 2.0 திட்டத்தின்கீழ் பின்வரும் பணிகள் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளன:-

(i) புதுச்சேரி நகரப்பகுதிகளில் 24 மணி நேரமும் குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு ₹ 20.38 கோடி செலவில் குடிநீர் மேம்பாட்டு பணிகள்.

(ii) புதுச்சேரி, வில்லியனூர் சங்கராபரணி ஆற்றில் ₹ 20.38 கோடி மதிப்பீட்டில் 3 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையம்.

(iii) மாகி நகராட்சியில் உள்ள வளமரைக் குளத்தினை ₹ 23 இலட்சம் செலவில் மேம்படுத்துதல்.

(iv) உழவர்கரை நகராட்சிக்குட்பட்ட கனகன் ஏரி மற்றும் தக்கக்குட்டையில் உள்ள தகனக்குட்டைக் குளம் (முதல் கட்டம்) ஆகியவை ₹ 2.75 கோடி செலவில் சீரமைத்தல். .

(v) காரைக்கால் காஜியார் வீதியில் உள்ள ஹைதர் பள்ளிக் குளம், திருநள்ளாறு சாலையில் உள்ள புதுக்குளம், காரைக்கால் சேனியார் குளத்து வீதியில் உள்ள சேனியார் குளம் ஆகியவற்றை ₹ 2.71 கோடி மொத்த செலவில் புதுப்பிக்கப்படும்.

**109.** தேசிய நகர்ப்புற வாழ்வாதார மேலாண்மை திட்டத்தின்கீழ், 81 சுய உதவிக் குழுக்களுக்கு தலா ₹ 10,000 சுழற்சி நிதியாக ₹ 81 இலட்சம் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. நகர்ப்புற வீடற்ற ஏழைகளுக்காக ₹ 70 இலட்சம் செலவில் தங்குமிடம் கட்டப்படும்.

**110.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 475.17 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பொலிவுரு நகரம்**

**111.** புதுச்சேரி நகரப் பகுதிகளில், பொலிவுரு நகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சுற்றுலா மேம்பாடு, மின்சார சீரமைப்பு, வீடு அல்லாதோருக்கு குறைந்த விலையில் வீடு வழங்குதல், பாரம்பரியமிக்க கல்விக்கட்டிடங்களை புனரமைத்தல், குடிநீர் வசதி, பாதாள சாக்கடையை புனரமைத்தல், நகர்ப்புற வடிகால் வசதி மேம்பாடு முதலிய பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றது.

**112.** புதுச்சேரி பிராந்தியம் கடலூர் சாலை AFT ஆலை அருகே போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு புதுச்சேரி அரசு இரயில்வே துறையுடன் இணைந்து ₹ 71.40 கோடி மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் புதுச்சேரி அரசின் பங்கான ₹ 53.55 கோடி இரயில்வேயிடம் வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்கான பணி விரைவில் தொடங்கும். புதுச்சேரி நகரப்பகுதியில் பாதாள சாக்கடை வசதிகள் அமைத்து 40 வருடங்களுக்கு மேல் ஆகிறது. எனவே தற்போதுள்ள அதன் செயல்பாட்டை ஆராய்ந்து, தேவையான பகுதிகளில் பொதுப்பணித் துறை மூலம் புனரமைப்பு பணிகள் ₹ 52.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் விரைவில் தொடங்கும். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் ₹ 100 கோடி மதிப்பீட்டில் தற்போது நடைபெற்று வரும் ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு கட்டளை மையம் அமைக்கும் பணிகள் டிசம்பர் 2024-முன்பு நிறைவடையும்.

**உள்துறை**

**113.** அமைதியையும், சட்டம் ஒழுங்கையும் நிலை நாட்டுவதில் காவல் துறையினரின் பணி மகத்தானது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர்.

**114.** எனது அரசு, ₹ 5.91 கோடி செலவில் புதுச்சேரியில் போதைப்பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவை (Anti Narcotic Task Force) வலுப்படுத்தவுள்ளது. புதுச்சேரி ஆட்சிப்பரப்பில், மத்திய அரசின் நிதி உதவியுடன் காவல், சிறைச்சாலை, நீதிமன்றம் மற்றும் தடவயியல் துறைகளிடையே தகவல் பரிமாற்றம் எளிதாக மற்றும் விரைவாக மேற்கொள்ள ₹ 6.29 கோடி செலவில் தற்போதுள்ள ICJS (Interoperable Criminal Justice System) வளைதளத்தை ICJS 2.0 ஆக தரம் உயர்த்தப்படும்.

**115.** காவல் துறையில் 2023-24ஆம் நிதியாண்டில் பல்வேறு காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டன. மீதமுள்ள காலிப்பணியிடங்கள் நடப்பு நிதியாண்டில் நிரப்பப்படும். அலுவலக உபகரணங்கள், மரச்சாமான்கள் (Furniture), மின்னணுக் கருவிகள் ஆகியவை ₹ 2.50 கோடி அளவில் கொள்முதல் செய்யப்படும். ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துப் பொருட்கள் ₹ 3 கோடி செலவில் தேவைக்கேற்ப வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**116.** காவல் தலைமை அலுவலகம் புனரமைத்தல், காவலர் பயிற்சிப் பள்ளியில் நீச்சல் குளம் அமைத்தல், கரிக்கலாம்பாக்கம் புறக்காவல் நிலையம் கட்டுதல், ஆயுதப்பிரிவிற்கு என்று ஒரு புதிய கட்டிடம் கட்டுதல் மற்றும் மாகியில் கடலோரக் காவல் நிலையம் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு கட்டட பணிகளுக்காக நடப்பு நிதியாண்டில் ₹ 21 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**117.** நடப்பு நிதியாண்டில் காவல் துறைக்காக ₹ 383.94 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**துறைமுகம்**

**118.** ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு துறைமுகங்கள் முக்கிய பங்காற்றுவதோடு மட்டுமல்லாது உலகளாவிய விநியோக சங்கிலியை அணுகுவதற்கும் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான வாய்ப்புகளையும் வழங்குகிறது.

**119.** புதுச்சேரி துறைமுகத்தில் 24 x 7 மணி நேரமும் சரக்கு மற்றும் மீன்பிடி படகுகள் வந்து செல்வதை உறுதி செய்யும் பொருட்டு துறைமுக முகத்துவாரத்தில் உள்ள மணலை குறைப்பதற்கான வழிகளை ஆராய்ந்து அறிக்கையை சமர்ப்பிக்க புனேவில் உள்ள மத்திய நீர் ஆற்றல் ஆராய்ச்சி நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த நிறுவனமானது முகத்துவாரத்தில் உள்ள படிமானங்களை குறைக்கவும் தற்போதுள்ள 3.5 மீட்டர் உயரமுள்ள சரக்கு கப்பல் செல்லக்கூடிய பாதையை அகற்றி 5.5 மீட்டர் உயரமுள்ள சரக்கு கப்பல் வந்து செல்லக்கூடிய அளவில் பாதை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்யும்.

**120.** புதுச்சேரி துறைமுகத்தில் பயணியர் கப்பல் வந்து செல்லக்கூடிய முனையம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையை தேசிய துறைமுகத்திற்கான தொழில்நுட்ப மையம் (M/s. National Technology Centre for Ports), நீர்வழிகள் & கடற்கரைகள்(Waterways & Coasts) (NTCPWC), இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னை(IIT, Chennai) மேற்கொள்ளும்,

**121.** சரக்கு மற்றும் மீன்பிடி படகுகள் துறைமுகத்திற்கு வந்து செல்வதற்கு ஏதுவாக மணல் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படும். தூர்வாரப்பட்ட மணலை கொண்டு புதுச்சேரி நகர கடற்கரையை புனரமைக்கவும். துறைமுகத்தில் வழிகாட்டி கருவிகள் அமைக்கவும் பயன்படுத்தப்படும்.

**122.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 16.03 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பொதுப்பணிகள்**

**123.** இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் உள்கட்டமைப்பு வசதிகள் மிக முக்கியப் பங்காற்றுகிறது. புதுச்சேரி ஆட்சிப்பரப்பு பொருளாதாரத்தில் வலிமையுடன் திகழ்வதற்கு, உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது இன்றியமையாகிறது. எனது அரசும், நமது ஆட்சிப்பரப்பில் உள்கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்க மிகவும் ஆர்வமாக உள்ளது.

**124.** புதுச்சேரி நகரப்பகுதியில் நிலவும் குடிநீரின் தரப்பிரச்சனையை தீர்க்க வானூர் மணற்கல்லில் இருந்து நல்ல தரமான நீரை எடுக்க 300 மீட்டருக்கும் அதிகமான ஆழத்திற்கு ₹ 12 கோடி மதிப்பீட்டில் 40 ஆழ்துளை கிணறுகள் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்படும். நபார்டு வங்கியின் நிதியுதவியுடம் புதுச்சேரி பிராந்தியத்தின் பல்வேறு பகுதிகளில் ₹ 30.50 கோடி மதிப்பீட்டில் 1 MLD கொள்ளளவு கொண்ட 7 உவர்நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும். AFD நிதியுதவியுடன் 20 MLD கொள்ளவு கொண்ட ஊசுடு ஏரியின் நீரை சுத்திகரிப்பு செய்யும் ஆலை மற்றும் வில்லியனூர் மற்றும் காலாப்பட்டு பகுதிகளில் குடிநீர் வழங்கல் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**125.** ஜல்ஜீவன் திட்டத்தின்கீழ் ₹ 11.50 கோடி மதிப்பீட்டில் பல்வேறு பகுதிகளில் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் ஏனாம் பிராந்தியத்தில் 5 MLD கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

**126.** கனகனேரி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் துர்நாற்றத்தை கட்டுப்படுத்தும் இயந்திரங்கள் நிறுவப்படும். இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கும். புதுச்சேரி துப்பராயன்பேட்டையில் ₹ 39.50 கோடி மதிப்பீட்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அம்ரூத் மற்றும் மாநில நிதியில் கட்டப்பட்டு வருகிறது.

**127.** சங்கராபரணி ஆற்றில் 3 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ₹ 36.70 கோடி மதிப்பீட்டில் அமைக்க ஒப்பந்த புள்ளிகள் மீண்டும் கோரப்பட்டுள்ளது. காரைக்காலில் 11 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி அம்ரூத் மற்றும் மாநில நிதியில் நடைபெற்று வருகிறது. 6 MLD மற்றும் 0.5 MLD கொள்ளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் முறையே ஏனாம் மற்றும் மாகியில் ₹ 28 கோடி மற்றும் ₹ 4.80 கோடி மதிப்பீட்டில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரியில் 50 MLD கொள்ளளவு கொண்ட சுத்திகரிப்பு நிலையம் அமைப்பத்றகாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ஆலோசனை நிறுவனத்தை நியமிக்கும்பணி இறுதிகட்டத்தில் உள்ளது. சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான பணி நடப்பாண்டில் தொடங்கப்பட்டு இரண்டு வருடங்களுக்குள் நிறைவடையும்.

**128.** எனது அரசு ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் நான்கு பிராந்தியங்களிலும் அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ₹ 4,125 கோடி மதிப்பீட்டில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த உத்தேசித்துள்ளது. நடப்பு நிதியாண்டில் இதற்கான பணிகள் தொடங்கும்.

**129.** நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் பிள்ளைச்சாவடி முதல் கணபதிசெட்டிக்குளம் வரை உள்ள கடலோரப் பகுதிகளில் புயலால் ஏற்படும் கடல் அரிப்பைத் தடுக்கும் பொருட்டு குறுகிய இடைக்கால அவசர தடுப்புகள் (Groynes) ₹ 22 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**130.** ஆண்டு முழுவதும் வடிகால்களை சுத்தமாக பராமரிக்க வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தத்தின்கீழ் உப்பார் வாய்க்கால், கருவடிக்குப்பம், பெரிய வாய்க்கால் மற்றும் உழந்தை உபரி போன்ற அனைத்து முக்கிய வடிகால்களையும் சுத்தம் செய்து தூர்வார உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி மற்றும் காரைக்காலின் பல்வேறு பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**131.** செல்லிப்பட்டு மற்றும் பிள்ளையார்குப்பம் கிராமத்தை இணைக்கும் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே ₹ 20.40 கோடி மதிப்பீட்டில் தற்போதுள்ள தடுப்பணைக்கு பதிலாக புதிய தடுப்பணை கட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மீண்டும் கோரப்படும்.

**132.** மறைமலை அடிகள் சாலை மற்றும் காமராஜர் சாலையை இணைக்கும் உப்பார் கால்வாயில் கட்டப்பட்டு வரும் மேம்பால கட்டுமானத்தின் மீதமுள்ள பணிகள் ₹ 29 கோடி மதிப்பீட்டில் நடப்பாண்டில் மாநில நிதியில் கட்டி முடிக்கப்படும்.

இந்திராகாந்தி மற்றும் ராஜீவ் காந்தி சதுக்கத்தை இணைக்கும் ₹ 500 கோடி மதிப்பீட்டில் மேம்பாலம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை சென்னையில் அமைந்துள்ள சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**133.** பிரதம மந்திரி கிராமப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (PMGSY) ₹ 60 கோடி மதிப்பீட்டில் புதுச்சேரி மற்றும் காரைக்கால் கிராமங்களில் 92 கிலோ மீட்டர் தொலைவிற்கு சாலைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. SIDBI, NABARD வங்கி மற்றும் மாநில நிதியுதவியுடன் புதுச்சேரி, காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் பிராந்திய நகர்ப்புறங்களில் சேதமடைந்த சாலைகள் மற்றும் பக்கவாட்டு வடிகால்கள் ₹ 120 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.

**134.** மாண்புமிகு துணைநிலை ஆளுநரின் தற்காலிக அலுவலகம் மற்றும் குடியிருப்பு வசதிக்காக பழைய சாராய ஆலை வளாகம் ₹ 13.40 கோடி செலவில் மேம்படுத்தப்படும். புதுச்சேரி, ராஜ்நிவாஸ் கட்டடம் ₹ 14 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்படும்.

**135.** இலாஸ்பேட்டையில் பழமையான பழுதடைந்த அரசு ஊழியர் குடியிருப்புகளுக்கு பதிலாக புதிய குடியிருப்புகள் ₹ 100 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**136.** 2024-25ஆம் நிதியாண்டில் பொதுப்பணித்துறைக்காக ₹ 743.89 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை**

**137.** நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியின் பத்து கிராமங்கள் வழியாக அமைய உள்ள விழுப்புரம்–புதுச்சேரி–கடலூர்–நாகப்பட்டினம் NH-45A நான்கு வழி தேசிய நெடுஞ்சாலைத் திட்டம் நிறைவடையும் கட்டத்தில் உள்ளது என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் ஒருபகுதியாக, நில உரிமையாளர்களுக்கு சேர வேண்டிய மீதமுள்ள இழப்பீட்டுத் தொகையான ₹ 10.59 கோடி நடப்பாண்டில் வழங்கப்படும். மேலும் தரம் பிரிக்கப்பட்ட சாலைச் சந்திப்பை மேம்படுத்துதல், மேம்பாலம், பிரதான சாலைக்கு இணையாக செல்லும் ஒரு பக்க சாலைகள் (Service Road) அமைத்தல் மற்றும் மரங்கள் வைப்பதற்காக கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கான இழப்பீட்டுத் தொகையான ₹ 7.08 கோடி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**138.** குப்பம், செல்லிப்பட்டு, துத்திப்பட்டு மற்றும் திருவாண்டார் கோயில் கிராமங்கள் வழியாக அமைய உள்ள மாமல்லபுரம்–புதுச்சேரி நான்கு வழிச் சாலைத் திட்டத்திற்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகை நடப்பாண்டில் வழங்கப்படும்.

**139.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 52.52 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல்**

**140.** காலநிலை மாற்றம் சுற்றுச் சூழல் மாசுபாடு மனித இனத்திற்கு மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். காற்று மாசுபாடு, சுற்றுச்சூழல் சீர்கேட்டிற்கு முக்கிய காரணியாகும். காற்று மாசுபடும் அளவைக் குறைப்பதன் மூலம் பல்வேறு நோய்கள் உண்டாவதைத் தடுக்க முடியும். கிராமப்புறங்களில் காற்றின் தரத்தை மதிப்பிடுவதற்காக புதுச்சேரியில் மூன்று காற்று தரக் கண்காணிப்பு நிலையங்களை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. காரைக்கால் திருநள்ளாறு கோயில் நகரத்தில் ₹ 17.26 கோடி மதிப்பீட்டில் தேசிய அறிவியல் அருங்காட்சியகம் மற்றும் மத்திய அரசின் கலாச்சார அமைச்சகத்தின் உதவியுடன் அறிவியல் மையம், மின்னணு கோளரங்கம் மற்றும் புத்தாக்க மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**141.** புதுச்சேரி நரம்பையில் நவீன கலை, கடல்சார் மற்றும் கடல் உயிரியல் நிலையத்தை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**142.** கடல் அரிப்பை தடுக்கும் பொருட்டு கடற்கரை மேலாண்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காலநிலை மேம்பாட்டிற்காக ₹ 130 கோடியில் நடவடிக்கை எடுக்கப்படும். கடற்கரை மீளமைப்பு திட்டத்தின்கீழ் புதுச்சேரி கடற்கறையின் தெற்குப்பகுதியில் ₹ 60 கோடி மதிப்பீட்டில் கடல் அறிப்பு தடுப்பு அறன் அமைத்தல், புதுச்சேரி-நெக்லஸ் திட்டத்தின் மூலம் தேங்காய்த்திட்டில் சூழல் இயலுக்கு உகந்த சுற்றுலா மேம்பாடு மற்றும் உள்ளூர்வாசிகளின் வாழ்வாதாரத்திற்கு உதவ ₹ 50 கோடியிலும், கப்பல் பயணம் முனையகம் அமைக்க ₹ 175 கோடியிலும், உலக வங்கிக் கடன் உதவியுடன் மேற்கொள்ளப்படும். கடலோரச் சுற்றுச்சூழலை மேம்படுத்தவும் பராமரிக்கவும் “நீடித்து நிலைத்திருக்கும் கடல் வளம் மற்றும் பொருளாதாரம்” (SHORE) திட்டத்தை நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளது.

**143.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 11.59 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## நகர மற்றும் கிராமத் திட்டமிடல்

**144.** கிராமப்புற சமுதாய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது மற்றும் அதிகரித்துவரும் சுற்றுச்சூழல், சமூக மற்றும் பொருளாதார இடர்பாடுகளை சமாளிக்கக்கூடிய ஒருங்கிணைந்த மற்றும் நிலையான குடியேற்றங்களை திட்டமிடுவதும் நகர்ப்புற மேம்பாட்டின் முக்கிய குறிக்கோளாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

**145.** அம்ருத் (AMRUT) துணைத் திட்டத்தின்கீழ், காரைக்கால் மற்றும் மாகிக்கான வரைவு புவியியல் தகவல் அமைப்பின் அடிப்படையிலான வளர்ச்சித் திட்டம் தயாரிக்கும் பணி நடந்து வருகிறது. அதற்கான அறிவிப்பு 2024-25ஆம் ஆண்டில் வெளியிடப்படும். மக்களின் நீண்டநாள் எதிர்பார்ப்பான தற்போதுள்ள குடியிருப்புகளை முறைப்படுத்துதல் தொடர்பாக எனது அரசு ஒருமுறை கட்டிட முறைப்படுத்துதல் திட்டத்தை இவ்வாண்டு நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளது.

**146.** சாதாரண, சிறப்பு, தொழிற்சாலை மற்றும் பல அடுக்கு மாடி உள்ளிட்ட அனைத்துவிதமான கட்டடங்களுக்கான அனுமதியை ஆன்லைன் மூலம் வழங்கும் வகையில் முழுமையான "புதுச்சேரி கட்டட விதிகள் மற்றும் மண்டல ஒழுங்குமுறை விதிகள்" திருத்தப்பட்டு நடப்பு நிதியாண்டில் நடைமுறைப்படுத்தப்படும்.

**147.** புதுச்சேரி பூமியான்பேட்டை, ஜவஹர் நகரில் உள்ள குடிசைமாற்று வாரியக் குடியிருப்புகளில் ₹ 1.63 கோடி மதிப்பீட்டில் கழிப்பிடங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், புதுச்சேரி வில்லியனூர் தொகுதிக்கு உட்பட்ட ஒதியம்பேட் மற்றும் திருவேணி நகரில் உள்ள குடியிருப்புகளில் சிறப்பு பழுது பார்ப்பு பணிகள் மற்றும் வடிகால்களுடன் உள்சாலைகள் அமைத்தல் ஆகியவை ₹ 39.25 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும். மேலும், ஏனாம் அய்யனார் நகரில் வடிகால்களுடன் உள்சாலைகள் ₹ 22.80 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

**148.** பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டத்தின்கீழ், இவ்வாண்டில் 2,500 வீடுகள் கட்டி முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வீடுகளைத் கட்டத் தொடங்கி நிறைவு செய்யாத பயனாளிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**149.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 51.78 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சுற்றுலா**

**150.** புதுச்சேரி ஆட்சிப்பரப்பு அழகிய கடற்கரை, பாரம்பரிய கட்டடங்கள், பழமைவாய்ந்த கோயிகள், கைவினைப்பொருட்கள் மற்றும் கழிமுகப் பகுதிகள் ஆகியவற்றிற்கு புகழ்பெற்றது. இந்த சூழலை அனுபவிப்பதற்காக உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் சுற்றுலா பயணிகள் நமது ஆட்சிப்பரப்பிற்கு வருகை புரிந்து வருகின்றனர். எனது அரசு, சுற்றுலா மேம்பாட்டிற்கு தேவையான அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளை பெருக்கி சுற்றுலா மேலும் வளர்ச்சியடையத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

**151.** மத்திய சுற்றுலா அமைச்சகத்தின் சுதேஷ் தர்ஷன் 2.0 மற்றும் பிரசாத் திட்டங்களின்கீழ் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளைப் மேற்கொள்ள புதுச்சேரி மற்றும் காரைக்கால் சுற்றுலா தளங்கள்

தேர்வு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இதற்கான விரிவான திட்ட அறிக்கை மத்திய சுற்றுலா அமைச்சகத்தால் நியமிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு அமைச்சகத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி பெற்றவுடன் பணிகள் விரைவில் தொடங்கும். புதுச்சேரி மற்றும் காரைக்கால் பிராந்திய கடற்கரைகள், ஆலங்குப்பம் ஏரி உள்ளிட்ட சுற்றுலா தளங்கள் "சுதேஷ் தர்ஷன் 2.0" திட்டத்தின்கீழும் மற்றும் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பிராந்தியத்தில் அமைந்துள்ள புகழ்பெற்ற ஆன்மீக தளங்கள் சுற்றுலா பயனிகள் மற்றும் பொதுமக்களை கவரும் வகையில் "பிரசாத் திட்டத்தின்கீழ்" மேம்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**152.** அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் தீம் பூங்காக்கள், தங்கும் விடுதிகள், உணவகங்கள் மற்றும் நல மையங்கள் உள்ளிட்ட சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகளுடன் புதுச்சேரி பிராந்தியம் மணப்பட்டு பகுதியில் பல்நோக்கு சுற்றுலா மையம் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும்.

**153.** புதுச்சேரியில் பயணியர் படகு சேவைகளுக்காக விருப்பமுள்ள நீர் விளையாட்டு தொழில்முனைவோர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். Scuba Diving மற்றும் பயணியர் படகு சேவைகளை இயக்க சுற்றுலா படகு இயக்குபவர்களுக்கு உரிமம் புதுப்பித்து வழங்கப்பட்டுள்ளது. உணவு மற்றும் உறைவிட வசதியுள்ள 33 நிறுவனங்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**154.** மாதாந்திர சுற்றுலா நிகழ்ச்சிகளாக சாகச விளையாட்டுகள், உணவுத் திருவிழா, கடற்கரைத் திருவிழா போன்ற விழாக்கள் இந்த ஆண்டிலும் கொண்டாடப்படும். மேலும், 2024-25ஆம் ஆண்டில் (1) காரைக்கால் கார்னிவல், (2) வணிகத் திருவிழா, (3) புத்தாண்டு கொண்டாட்டம், (4) பிரெஞ்சுத் தூதரகத்துடன் இணைந்து பிரெஞ்சு திருவிழா போன்றவைகள் மேலும் சிறப்பாக கொண்டாடப்படும்.

**155.** புதுச்சேரி சுற்றுலாவை மேம்படுத்தி சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை உயர்த்தும் வகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாக் கண்காட்சிகளில் பங்குபெறுதல் மற்றும் சுற்றுலா முதலீட்டாளர்களை சந்தித்து முதலீட்டை பெருக்க திட்டமிடப்பட்டுள்ளது. புதுச்சேரி முருங்கப்பாக்கத்தில் மின்னனு அருங்காட்சியகம் தனியார் பங்களிப்புடன் மேம்படுத்த உடன்பாடு கையெழுத்திடப்பட்டுள்ளது.

**156.** புதுச்சேரியில் தற்போதுள்ள விமான நிலையம் 72 இருக்கைகள் கொண்ட ஏடிஆர் வகை விமானங்கள் மட்டுமே இயக்கும் திறன் கொண்டது. தற்போதுள்ள ஓடுதளத்தை 3000 மீட்டர் நிளத்திற்கு அமைப்பதற்கு அதிக நிதி தேவைப்படும் என்பதால் ஓடுதளத்தின் திசையை தேசிய நெடுஞ்சாலை-45 நோக்கி அமைப்பதற்கான தொழில்நுட்ப மற்றும் பொருளாதார சாத்தியக்கூறுகளை ஆராய இந்திய விமான ஆணையத்திடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

விமான ஆணையத்தின் ஒப்புதல் பெற்றவுடன் நாட்டின் அனைத்து பெருநகரங்களுக்கும் மற்றும் சர்வதேச நகரங்களுக்கும் பெரிய அளவிளான விமானங்களை இயக்கும் அளவில் விமான நிலையத்தை விரிவாக்கம் செய்ய முடியும்.

**157.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 31.75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**போக்குவரத்து**

**158.** போக்குவரத்து பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமானதாகும். நமது புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் மின்சார வாகன பயன்பாட்டை அதிகரித்து வாகனங்களால் காற்று மாசுபடுவதை தவிர்த்து சுற்றுச்சூழலை பாதுகாக்க மின்சார வாகனக் கொள்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. இதன் அங்கமாக அனைத்து மின் வாகனங்களுக்கும் தகுந்த மானியம் வழங்கி பொது மக்கள் மின்சார வாகனங்களை அதிகம் பயன்படுத்த ஊக்குவிக்கப்படும். மேலும் மின்சார வாகனங்களுக்கு சாலை வரி செலுத்துவதில் இருந்து 50 விழுக்காடு சலுகை வழங்கப்படும். பொது மற்றும் தனியார் இடங்களில் வாகன மின் ஏற்றி மையங்கள் (Charging Stations) அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஊக்கத் தொகை வழங்குதல் மற்றும் நிறுவன ஆதரவின் மூலம் மின் வாகனங்கள் மற்றும் மின் ஏற்றி நிலையங்களில் உள்கட்டமைப்பு போன்றவற்றைப் பராமரிக்கும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளுக்கு ஆதரவு அளிக்கப்படும்.

**159.** புதுச்சேரி அரசு நகரங்களுக்கு இடையேஆன நீண்ட தூர வழித்தடங்களுக்கு 10 மிதவைப் பேருந்துகளை இயக்க முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. தனியார் பங்களிப்புடன் 25 ஒன்பது மீட்டர் மின்சார பேருந்துகள் பொலிவுரு நகர திட்டத்தின்கீழ் பொதுப் போக்குவரத்திற்கு இயக்க உத்தேசித்துள்ளது. இதில் 10 குளிர்சாதன வசதி பேருந்துகள் நகரம் மற்றும் துணை நகரங்களில் இயக்கப்படும். மேலும், பிரதம மந்திரியின் மின்சார பேருந்து சேவை திட்டம் மூலம் 75 மின்சார பேருந்துகள் மத்திய அரசின் மானியத்துடன் இயக்கப்படும். இதற்கான பேருந்து கிடங்கு மற்றும் மின்சார கட்டமைப்புகளுக்கு 100 மற்றும் 90 விழுக்காடு நிதி உதவி பெறுவதற்கு திட்ட அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

**160.** பழைய வாகனங்களை அழித்து புதிய வாகனங்கள் வாங்குவோரை ஊக்குவிக்கும் பொருட்டு பழைய வாகன அழிப்பு கொள்கை (Puducherry Motor Vehicle Scrapping Policy 2024) உருவாக்கப்பட்டு வணிக வாகன உரிமையாளர்களுக்கு 15 விழுக்காடு (8 ஆண்டுகளுக்கு) மற்றும் தனிநபர் வாகனங்களுக்கு 25 விழுக்காடு வரி விலக்கு அளிக்கப்படும்.

**161.** பொலிவுரு நகரத் திட்டத்தின்கீழ் புதுச்சேரி நகரப் பகுதியில் 15 நவீன பேருந்து நிறுத்தங்கள் (Smart Bus Shelters) விரைவில் நிறுவப்பட உள்ளது. மேலும், 38 மின்சார இழுப்பு வண்டிகள் (e-Rickshaws), பெண்கள் சுய உதவி குழுக்கள் மூலம் சுற்றுலா மற்றும் பொது மக்களின் நகர பயண தேவையை கருதி விரைவில் இயக்கப்பட உள்ளது.

**162.** புதுச்சேரி சாலை போக்குவரத்து கழகத்தில் இயக்கப்படும் அனைத்து பேருந்துகளுக்கும் தானியங்கி கட்டண வசூல் வசதி (Automated Fare Collection System) மற்றும் நுண்ணறிவு போக்குவரத்து அமைப்பு (Intelligent Transport System) நிறுவ மத்திய அரசின் நிதி உதவி பெறப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் விரைவில் கோரப்பட உள்ளது.

**163.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 47.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஆதி திராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலம்

**164.** ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சமூகப் பொருளாதார மேம்பாடு, அரசின் முக்கிய கொள்கைகளுள் ஒன்றாகும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குழந்தைகளும் பிறரைப் போல வாழ்வில் உயர அவர்களுக்குத் தரமான மற்றும் போதுமான கல்வியைத் தருவதில் இந்த அரசு கவனம் செலுத்துகிறது. இந்த ஆண்டு சிறப்புக் கூறு திட்ட நிதியாக (SCSP) ₹ 488 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**165.** எனது அரசு “முதல்வரின் புதுமைப் பெண்” என்னும் புதிய திட்டத்தின் மூலம் பணிபுரியும் பெண்கள் மற்றும் கல்லூரி மாணவிகளுக்கு மின்சார இரு சக்கர வாகனம் வாங்குவதற்கு வாகன விலையில் 75 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ₹ 1,00,000 வரை வழங்க உத்தேசித்துள்ளது.

இதன் மூலம் 500 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின வகுப்பைச் சார்ந்த பணிபுரியும் பெண்கள் மற்றும் கல்லூரி மாணவிகள் பயன்பெறுவர்.

**166.** சூரிய ஒளி மின்சார பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சார்ந்த பயனாளிகளின் வீட்டு மாடியில் நெட் மீட்டருடன் 2 கிலோ வோல்ட் சூரிய மின் தகடு நிறுவுவதற்கு 90 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக ₹ 1,00,000 வரை 200 பயனாளிகளுக்கு நடப்பு நிதியாண்டில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**167.** பிரதமரின் மருத்துவ காப்பீடு திட்டத்தின் வரம்பிற்குள் வராத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சார்ந்த அனைவருக்கும் “காமராஜர் மருத்துவ காப்பீடு” திட்டத்தின்கீழ் ₹ 5 இலட்சம் வரை சுகாதார காப்பீடு வழங்கப்படும்

**168.** அரசு பள்ளிகளில் 8ஆம் வகுப்பு மற்றும் 9ஆம் வகுப்பில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சார்ந்த மாணவர்களை மூன்று நாள் கல்விச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லப்படும். கற்றல் அனுபவத்தை மேம்படுத்த 5ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை அரசு பள்ளியில் பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு கற்றல் மென் பொருள் பதிவேற்றம் செய்யப்பட்ட கைக் கணினி (Tablet) வழங்கப்படும்.

**169.** புதுச்சேரியின் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின வகுப்பினருக்கான நலத்திட்ட உதவிகளை விரிவுபடுத்த அவர்களுக்கென தனிப்பட்ட அடையாள அட்டைகளை 2024-25ஆம் ஆண்டில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**170.** எனது அரசு "முதல்வரின் கிராமம்" என்னும் மற்றொரு திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் 50 விழுக்காட்டுக்கும் அதிகமாக உள்ள 10 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அடுத்து வரும் மூன்றாண்டுகளுக்கு அந்தக் கிராமங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்த ஒவ்வொரு கிராமத்துக்கும் வருடத்திற்கு ₹ 50 இலட்சம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**171.** "மண்ணின் மகள்" திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சார்ந்த 18 முதல் 40 வயதுள்ள பெண்களுக்கு ₹ 25,000 மானியத்துடன் கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**172.** தேசிய அளவில் விளையாட்டுப் போட்டியில் பங்கேற்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களின் திறனை வளர்த்துக் கொள்வதற்காக உதவித்தொகை வழங்கப்படும். தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்க ஆகும் மொத்த செலவையும் அரசே ஏற்கும். அரசு பள்ளியில் பயிலும் மாணவிகளின் பெற்றோர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ₹ 3,000 வாய்ப்பு (Opportunity cost) ஊதியத் தொகை ₹ 6,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**173.** ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை அரசு பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் ₹ 1,000 தக்கவைப்பு ஊக்கத்தொகை (Retention Scholarship) ₹ 5,000-ஆக உயர்த்தி வழங்கப்படும். இதைபோலவே 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த கல்வி உதவித் தொகை ₹ 1,500-லிருந்து ₹ 5,000 ஆகவும் மற்றும் 9ஆம் வகுப்பு மற்றும் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த கல்வி உதவித் தொகை ₹ 2,500-லிருந்து ₹ 8,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**174.** எனது அரசு அயல் நாட்டில் கல்வி பயிலும், புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த SC/ST மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தை மத்திய அரசின் நெறிமுறைப்படியும் அவர்களின் உதவியுடனும் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்**

**175.** பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினர் மக்களை முன்னேற வைத்து அவர்களுக்கு நிதி உதவிகளை அளிப்பதன்மூலம் தன்னிறைவு பெற்ற குடிமக்களாக ஆக்குவதே இந்த அரசின் இலட்சியம் ஆகும்.

**176.** பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையினரின் கல்வி, பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்களை எனது அரசு இவ்வாண்டும் நடைமுறைப்படுத்த உள்ளது. வில்லியனூர் மற்றும் புதுச்சேரி காமராஜர் நகரில் பிற்படுத்தப்பட்ட பெண்களுக்கான புதிய விடுதி கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. பிரதம மந்திரி ஜன் விகாஸ் காரியகரம் (PMJVK) திட்டத்தின்கீழ் சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் பகுதிகளை கண்டறிந்து, அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

**177.** பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் கல்வி மற்றும் வேலை வாய்ப்பினை மேம்படுத்தும் வகையில் அவர்களுக்கு திறன் மேம்பாட்டு மற்றும் போட்டித் தேர்வுப் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**178.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 21.29 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சமூக நலம்**

**179.** சமூக நலத்துறையின் முக்கியக் குறிக்கோள், மாற்றுத் திறனாளிகளுக்கு தரமான சுகாதாரம் மற்றும் நல்ல வாழ்க்கைச் சூழ்நிலைகளோடு சக மனிதர்களுக்கு இணையான சம வாய்ப்புகளை வழங்கி இயன்றவரை சுயமதிப்புடன் வாழவைக்க அவர்களின் பொருளாதாரத் தேவைகளை பூர்த்தி செய்வதே ஆகும்.

**180.** தற்பொழுது நடைமுறையில் உள்ள நலத்திட்டங்களுடன் மேலும் சில நலத்திட்ட உதவிகளையும் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்க எனது அரசு திட்டமிட்டுள்ளது. பன்னாட்டு, தேசிய மற்றும் வட்டார அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் அங்கீகரிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் விளையாட்டுக் கழகங்களுக்கு பயணப் படியும், அகவிலைப்படியும் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கான நிதி உதவியும் வழங்கிட அரசு உத்தேசித்துள்ளது.

**181.** "விளிம்புநிலை நபர்களுக்கான வாழ்வாதாரம் மற்றும் தொழில்களுக்கான உதவி" (SMILE) திட்டத்தின்கீழ் யாசகம் எடுப்பவர்களை அடையாளம் கண்டு கணக்கெடுப்பு நடத்தி தேசிய அளவிலான தரவுகளைப் பராமரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், அவர்களுக்கு தங்குமிட வசதிகள் மற்றும் விழிப்புணர்வு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இவர்கள் தங்கும் இடத்திலேயே தொழில் செய்யவும் மருத்துவ உதவிகளுடன் சுகாதாரம் பற்றிய ஆலோசனைகளை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. போதை மற்றும் தடைசெய்யப்பட்ட போதைப்பொருள் பழக்கத்திற்கு அடிமையாகி உள்ளவர்களுக்கு சிகிச்சை அளித்து மறுவாழ்வு அளிக்க சுகாதாரத் துறையுடன் இணைந்து "போதை தடுப்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையம்" நிறுவப்படும்.

**182.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 108.98 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு**

**183.** ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் மகளிருக்கு அதிகாரமளித்தல் ஆகியவற்றை உறுதி செய்வதை இந்த அரசு கருத்தில் கொண்டு அவர்களின் நலத்தில் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. மேலும் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுக்காக பல்வேறு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்திவருகிறது. பெண்களின் பொருளாதார நிலையை உயர்த்த குறிப்பாக கிராமப்புற பெண்களின் சமூக பொருளாதார நிலையை மேலும் மேம்படத் தேவையான நலத்திட்டங்களை வகுத்து செயல்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

**184.** அங்கன்வாடி ஊழியர்கள், குழந்தைகளின் வளர்ச்சியை கண்காணிக்கும் பொருட்டு ₹ 78 இலட்சம் செலவில் குழந்தையின் வளர்ச்சியை கண்காணிக்கும் இயந்திரம் (Growth Monitoring Device) வழங்கப்பட உள்ளது. தேவையான அங்கன்வாடி மையங்களில் பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்படும். அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கு கற்பித்தல் மேற்கொள்வதற்கு விளையாட்டு மற்றும் அடிப்படைக் கல்வி உபகரணங்கள் வாங்கப்படும். படிப்பு மற்றும் வேலை சம்பந்தமாக இடம் விட்டு இடம் பெயறும் பெண்களுக்காக விடுதி கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், வேலைக்குச் செல்லும் பெண்களின் குழந்தைகளைப் பராமரிக்க அங்கன்வாடி மையங்கள் அங்கன்வாடி மற்றும் குழந்தைகள் பராமரிப்பு மையமாக மாற்றப்படும்.

**185.** புதுச்சேரி, காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் பகுதிகளில் உள்ள பேருந்து மற்றும் இரயில் நிலையங்களில் குழந்தைகள் உதவி மையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. குழந்தைகளை இணையவழி பாலியியல் துன்புறுத்தல் மற்றும் சுரண்டல்களில் இருந்து பாதுக்காக்க இளையோர் மற்றும் குழந்தைகள் தலைமைத்துவ மையத்துடன் (TYCL) இணைந்து “குழந்தைகள் பாதுகாப்பான ஆன்லைன்” என்ற திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. மேலும், தத்தெடுக்கப்பட்ட குழந்தையுடன் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்காக வருங்கால தத்தெடுப்பு பெற்றோருக்கு அவர்களின் குழந்தையுடன் சந்திப்பு மற்றும் கூட்டத்தை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**186.** நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 753.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பொது**

**187.** எனது அரசு பின்வரும் திட்டங்களை நடப்பாண்டில் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளது.

(i) வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் மருத்துவ செலவினை புதுச்சேரி மருத்துவ நிவாரண சங்கத்தின் (PMRS) மூலம் திருப்பியளிக்கப்படும்.

(ii) இம்மாநில வீட்டுவசதித் திட்டமான “பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு வீடு கட்டும் திட்டத்தின்கீழ்” வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் குடிசை வீடுகளை கல்வீடுகளாக மாற்ற நிதி உதவியளிக்கப்படும்.

(iii) ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் பகுதியில் உள்ள திருக்கோயில்களை புனரமைக்க ₹ 10 இலட்சம் நிதியுதவி அளிக்கப்படும்.

(iv) அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை படித்து இளநிலை கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு மாதம் தோறும் ₹ 1,000 மூன்றாண்டுகளுக்கு வழங்கப்படும்.

**188.** எனது அரசு புதுச்சேரி மற்றும் காரைக்கால் பிராந்தியத்தில் உள்ள நலிவடைந்த கூட்டுறவு சங்கங்களை 90:10 (மாநிலம்:சங்கம்) என்ற விகிதத்தில் நிதியுதவி அளித்து வலுப்படுத்த ₹ 15.00 கோடி நடப்பு நிதியாண்டில் வழங்கப்படும்.

**189.** எனது அரசு, இந்த ஆட்சிப்பரப்பில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் 100 விழுக்காடு தடுப்பூசி செலுத்திக் கொள்வதை உறுதி செய்யும் பொருட்டு, பிறந்து ஒரு வருடத்திற்குண்டான தடுப்பூசி அட்டவணைப்படி (Mission Indradhanush) அனைத்து தடுப்பூசிகளையும் செலுத்திக்கொள்ளும் புதுச்சேரியைப் பூர்வீகமாக கொண்ட பெற்றோர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு ₹ 10,000 நிதியுதவி வழங்கப்படும்.

**190.** கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்வது தொடர்பான நிர்வாக விதிமுறைகளில் சிறப்பு "ஒரு முறை தளர்வு" அளித்து, வயது மற்றும் இதர தகுதி வரம்பை பூர்த்தி செய்யும் விண்ணப்பங்களை பரிசீலிக்க "ஒப்பீட்டு சேவை பயன் கொள்கையினை" உருவாக்க எனது அரசு ஆராய்ந்து வருகிறது.

இதேபோல், செயல்படாத நிறுவனங்களின் மனிதவளம் தொடர்பான பிரச்சனைகளுக்கு உகந்த தீர்வுகளைக் காணவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நிறைவுரை**

**191.** எனது அரசு நிதிப்பற்றாக்குறை, மாநில மொத்த உற்பத்தி மதிப்பு, கடன் விகிதம் போன்ற நிதிநிலை குறியீடுகளை வரையறைக்குள் பராமரித்து வருகிறது. 2024-25ஆம் ஆண்டு நமது ஆட்சிப்பரப்பின் உள்கட்டமைப்பு வசதிகளை உயர்த்தும் பொருட்டு, கடந்த நிதி ஆண்டைக்காட்டிலும் நடப்பு நிதியாண்டிற்கு மூலதன செலவினங்களுக்காக கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதே நேரம், ஏழை எளியோர் நலிவுற்றோர், மகளிர், இளைஞர்கள், குழந்தைகள் ஆகியோர்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் எனது அரசு எப்போதும் முழுக்கவனம் செலுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

**192.** சம்பளங்கள், ஓய்வூதியங்கள், கடனை திருப்பி செலுத்துதல், வட்டி போன்றவற்றிற்கான செலவினங்கள் உயர்ந்து கொண்டே வருகின்றன. எனவே வளர்ச்சி சார்ந்த செலவினங்களுக்குத் தேவையான நிதி ஆதாரங்களை கண்டறிவதற்கான வழிமுறைகளை ஆராய எனது அரசு உறுதி பூண்டுள்ளது. இதன்மூலம் நமது ஆட்சிப்பரப்பின் பொருளாதாரம்

மேலும் வளர்ச்சி அடைவதுடன் வேலைவாய்ப்பும் பெருகும். நமது மாநிலத்தின் சொந்த வருவாய் கணிசமான அளவில் உயரும். இதனால் பல நலத்திட்டங்கள் நம்மால் செயல்படுத்தி சமூக பொருளாதார முன்னேற்றம் அடைய முடியும்.

**193.** இந்த நிறைவுரையுடன், 2024-25ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்டத்தை இம்மேலான பேரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கின்றேன்.

**வாழ்க பாரதம் !**

**வெல்க புதுச்சேரி !**

**நன்றி ! வணக்கம் !**




புதுச்சேரி சட்டப்பேரவை

**BEST - PUDUCHERRY**

( **B**usiness, **E**ducation, **S**piritual and **T**ourism Hub - Puducherry )

வடிவமைத்து அச்சிட்டோர் : அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி - 605 009.